[1979 பிப்ரவரி 2

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

*வினா எண் 109—திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

திருமுட்டம் என்ற ஓர் புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு மட்டும் அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தென் ஆற்காடு மாவட்டத்தில் மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்கள் எவ்வளவு இருக்கின்றன? மங்களூர் ஒன்றியம், நல்லூர் ஒன்றியம் இந்த இரண்டு ஒன்றியங்களையும் பிரித்து மூன்று ஒன்றியங்களாக மாற்றியமைக்கும்படி வேண்டுகோள் அனுப்பப்பட்டிருக்கிறன. அதை மறுபரிசீலனை செய்து அவற்றை அப்படிப் பிரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க என்னென்ன வழிமுறைகள், எந்தெந்த அடிப்படையில் பிரிக்கப்பட்டு வருகின்றன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவாக பெரிதாக இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மங்களூர், நல்லூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கிற செயற்குறிப்பு ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : தமிழ்நாட்டில் பெரிய ஒன்றியமாக இருக்கிற உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பதற்காக மக்கள் பலமுறை விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊராட்சி ஒன்றியத்தை பிரித்தமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; எங்கு விண்ணப்பித்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அரசிடம் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம் 58 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. அதைப் பிரிக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

1979 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி அரசுக்கு எந்தக் குறிப்பும் வரவில்லை.

திரு. சி. ராமநாதன் : மங்களூர், நல்லூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மூன்றாவது ஒன்றியமாக பெண்ணாடம் ஒன்றியம் என்று ஏற்படுத்துவதற்கு ப்ரபோசல் அனுப்பப் பட்டிருந்ததே, அது நிறைவேற்றப்படுமா அல்லது நிராகரிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது. அரசுக்கு வந்ததற்குப் பிறகு அது ஆயப்படும்.

திரு. த. ஆறுமுகம் : தென் ஆற்காடு மாவட்டத்தில் எவ் வளவு ஒன்றியங்களைப் பிரிக்கும் ஆலோசனை இருக்கிறது ? ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் என்று ஏற்படுத்துவதாக சொல்லி யிருக்கிறார்களே, வருகிற தேர்தலுக்கு முன் அது ஏற்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி ஆய்வில் இருக்கிறது, அது முடிந்த பிறகு தெரிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தென் ஆற்காடு மாவட்டம் பற்றிய கேள்வி. திரு. கோவிந்தராசன்.

திரு. சி. கோவிந்தராசன்: தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஒன்றியங்களுக்கு போடப்பட்டுள்ள ஆலோசனைக்குழு நடத்தப் படாமலேயே இருந்து கொண்டிருக்கிறது. அதை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் உத்தேசமுண்டா ? அந்தக் குழு போட்டது மாதிரியே இருக்கிறது, செயல்படவில்லை. அதை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; மூலக்கேள்வி ஒன்றியங் களைப் பிரிப்பது பற்றிய கேள்வி. உறுப்பினர் இது பற்றி தனிக் கேள்வி போட்டால் அது பற்றி பரிசீலிக்கலாம். குறிப்பாக எந்த ஊராட்சி ஒன்றியத்தில் அக்குழு சரியாகச் செயல்பட வில்லை என்று தெரிவித்தால் அது பற்றி முடிவு செய்யலாம்.

திரு. து. இராமசாமி : ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கிற நேரத்தில் அது மக்கள் தொகை அடிப்படயில் பிர்க்சப்படு கின்றனவா ? அல்லது அந்த ஒன்றியத்தில் இருக்கிற ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கையை வைத்துப் பிரிக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படி ஊராட்சி ஒன்றிங்களைப் பிரிக்கிற நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கு இல்லாத காரணத்தால் தேர்தலுக்குப் பிறகு அவற்றைப் பிரிப்பது நியாயமாக இருக்கும். ஆகவே, அதுவரை அதை ஒத்தி வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவாக மக்கள் தொகை, ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கை இவைகளின் அடிப்படையில் பெரிதாக இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசிடம் இப்போது இருக்கிறது. தேர்தலுக்கு வசதியாக இருக்க வேண்டும் என்ற வகையில் தான் பிரிக்கும் உத்தேசமிருக்கிறது.

திரு. மொ. பெரியசாமி : மங்களூர், நல்லூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து பெண்ணாடம் என்று புதியதாக ஒரு ஒன்றியம் அமைக்க எவ்வளவு நாட்களுக்குள் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி குறிப்பு அமைச்சருக்கே வரவில்லை, அரசு தலைமைச் செயலகத்திற்கும் வரவில்லை, ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : போகளூர் ஊராட்சி ஒன்றியம் 63 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. ஏற்கனவே அதை பிரித்து விட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று பிரித்த பிற்பாடு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு ஏகமனதாக பிரிக்கப்பட்டு, அந்த யூனியனில் உள்ள சில கிராமங்களைத் தனித்தனியாகப் பிரித்து அந்தப் பக்கத் திலிருந்து இந்தப் பக்கம் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம் என்று போட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : போகளூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்கிற செயற்குறிப்பு இருக்கிறது. அதிலுள்ள சிக்கல்கள் பற்றி எழுதியனுப்பினால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

*வினா எண். 110—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி, ஜவ்வாது மலையில் உள்ள ஊராட்சிகளை ஒன்று சேர்த்து மலைவாழ் மக்களுக்குத் தனி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்

(ஆ) செயற்குறிப்பின்படி புதிய ஒன்றியத்தில் 20 ஊராட்சிகள் இடம் பெறும். இது இன்னும் அரசின் ஆய்வில் உள்ளது.

(இ) இக்கேள்விக்கு இப்போது இடமில்லை.